

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு மாசி மாதம் மாதம் 3 ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**அதிகாரம் : இல்வாழ்க்கை - குறள் எண் : 47**

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

**குறள் விளக்கம்**

நல்வாழ்வுக்கான முயற்சிகளை மேற்கொள்வோரில் தலையானவராகத் திகழ்பவர், இல்வாழ்வின் இலக்கணமுணர்ந்து அதற்கேற்ப வாழ்பவர்தான்.

பழமொழி ( Proverb )

***A snake could make an army panic***

**பாம்பென்றால் படையும் நடுங்கும்**

பொன்மொழி

கல்விச் செல்வத்தை மட்டும்தான் யாரும் களவாட முடியாது.

இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

இன்றைய பொது அறிவு வினா விடை

1. ஸ்க்ரூ தயாரிக்கும் முறையை கண்டுபிடித்தவர்? பெஸன்
2. ஸ்டெயின்லெஸ் ஸ்டீலை கண்டுபிடித்தவர்? டேவிட் புஸ்னெல்

தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Who isn't here today? இன்று யார் இங்கே இல்லை?

Show me your pencil. உங்களுடைய பென்சிலைக் காட்டுங்கள்.



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- செர்பியா தேசிய தினம்
- யூட்யூப் சேவை அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது(2005)
- அமெரிக்காவில் செயின்ட் லூயிஸ் நகரம் அமைக்கப்பட்டது(1764)
- ரஷ்யாவில் அதிபர் பதவி ஏற்படுத்தப்பட்டது(1994)

### இன்றைய செய்திகள்

⇒ தென்காசி மாவட்டம் ஆலங்குளம் வட்டம் நொச்சிக்குளம் கிராமத்தின் விவசாய விளை நிலத்தில் 800 ஆண்டுகள் பழமையான பிற்கால பாண்டியர் கல்வெட்டை மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி வரலாற்று பேராசிரியர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

⇒ கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் 16ஆம் தேதி வரைக்கும் மிதமான மழையே பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கணித்துள்ளது.

⇒ வினாத்தாட்கள் வெளியாகியிருந்தாலும் தேர்வு அட்டவணையில் மாற்றமில்லை என பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

⇒ மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி எழுதிய 'செம்மொழி வாழ்த்து' பாடலை பள்ளிப் பாடப்புத்தகங்களில் மீண்டும் அச்சிட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

⇒ உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட நீதியரசர் முனீஸ்வர் நாத் பண்டாரிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் மலர்கொத்து வழங்கினார். பின்னர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்த மு.க.ஸ்டாலின் தமிழக அரசு வெளியிட்ட கீழடி புத்தகத்தை பரிசாக அளித்தார்.

⇒ தமிழ்நாட்டில் நேற்று 2296 பேருக்கு மட்டுமே வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.